வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கான

# மின்னிதழ்

தொகுதி 4, மார்ச் 2023




## வாக்குப்பதிவு நாள்

# ஆசிரியர் குழு

**என். என். புடோலியா**
முதுநிலை முதன்மைச் செயலாளர்
(வாக்காளர் பட்டியல்)

**அசோக் குமார்**
இயக்குநர்
(தகவல் தொழில்நுட்பம்)

**எஸ். சுந்தர் ராஜன்**
இயக்குநர்
(மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்)

**தீபாலி மசிர்கர்**
இயக்குநர்
(தேர்தல் திட்டமிடல்)

**குல்தீப் குமார் சஹாராவத்**
இயக்குநர்
(பயிற்சி), IIIDEM

**சந்தோஷ் அஜ்மீரா**
இயக்குநர்
(உறுப்பினர் ஒருங்கிணைப்பாளர்)

# தலையங்க அணி

**ஆர் கே சிங்**
ஒருங்கிணைப்பாளர்
(வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்)

**அனுஜ் சந்தக்**
இணை இயக்குநர்
(வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்)

**நூபூர் பிரவீன்**
தொடர்பு ஆலோசகர்

**ஈஷா கான்**
கிராஃபிக் டிசைனர்

# இந்திய ஜனநாயகத்தின் களப் பணியாற்றும் வீரர்களுக்கான வரைபடம்


## வாக்காளர்களுக்குத் தெரிவிப்பதற்கும், கற்பிப்பதற்கும்




- தகுதியுடைய குடிமக்கள் வாக்காளர்களாக மாறுவதற்கும், வாக்காளர் அட்டைகளைப் பெறுவதற்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் உதவுகிறார்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர், இந்திய தேர்தல் ஆணையத்தின் செயலிகள், புதிய முயற்சிகள், தேர்தல் சீர்திருத்தங்கள் மற்றும் சமீபத்திய தகவல்கள் பற்றி குடிமக்களுக்கு தெரிவிப்பார்.
- வாக்காளர்களின் தகவல்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு, நீக்குவதற்கு மற்றும் திருத்தம் செய்வதற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர் வெவ்வேறு படிவங்களை வழங்குவதுடன், இல்லந்தோறும் வாக்காளரின் தகவல்களைச் சரிபார்த்து அவ்வறிக்கையை வாக்காளர் பதிவு அலுவலரிடம் வழங்குகிறார்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர் உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடி இறந்த/இடம் மாறிய/ஒருமுறைக்கு மேல் பதிவு செய்த வாக்காளர்களைக் கண்டறிந்து சட்டப்படியான நடைமுறைக்குப் பிறகு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவார்.

## வாக்காளர் கையேடு விநியோகம்

- வாக்காளர் வழிகாட்டியானது, வாக்குச் சாவடியில் வாக்காளர் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகள், வாக்களிக்கத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்கள், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் -வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (EVM-VVPAT) பயன்படுத்தி எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- தேர்தல் நடைபெறுவதற்கு 5 நாட்களுக்கு முன்னதாக வாக்காளர் தகவல் சீட்டுகளுடன் உள்ளூர் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வாக்காளர் கையேட்டினை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் விநியோகிக்க வேண்டும்.




## புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்



- வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தேர்தல் நாளில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்திருக்க வேண்டும்.
- வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு வரும்போது விவரங்களைச் சரிபார்க்க இது பயன்படுகிறது.
- வாக்களிக்கும் வசதிக்காக வாக்காளர் பட்டியல் பிழைகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

# வாக்காளர்களுக்கான வசதிகள்



- தேர்தல் நாள் நெருங்கும்பொழுது, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தகுதியான வாக்காளர்களுக்கு (மாற்றுத்திறனாளிகள் / மூத்த குடிமக்கள்) வாக்குச்சாவடிக்கு சென்று வர தேவையான போக்குவரத்து வசதிக்கான முன்பதிவை முன்கூட்டியே செய்ய வேண்டும்.
- கோவிட் நோய்த் தொற்றுள்ளவர்கள் அல்லது உடல்நிலை சரியில்லாத மூத்த குடிமக்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதிக்காக விண்ணப்பப் படிவத்தை நிரப்பி சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்பிக்க வேண்டும். இத்தகைய விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு சீரான முறையில் சென்றடைவதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

# தேர்தல் நாளில் உதவி மையத்தை நிர்வகித்தல்

வாக்காளர்கள் தங்கள் பெயர்களை அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் கண்டறிவதற்கு வாக்குச்சாவடியில் உள்ள உதவி மையத்தை, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நிர்வகிக்க வேண்டும்.
தேர்தல் நாளில் வாக்களிக்க வரும் அனைத்து வாக்காளர்களின் பெயர்களையும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் குறித்துக் கொள்ள வேண்டும்.
தேர்தல் நிறைவடைந்தவுடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்களிக்காதவர்களின் பட்டியலைத் தயாரித்து, அவர்கள் வாக்களிக்காத காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



## திறன்மிகுந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் : தேர்தல் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயலிகளை விளம்பரப்படுத்துதல்

இந்திய தேர்தல் ஆணையமானது வாக்களிப்பதை எளிதாக்குவதற்கும் மற்றும் தேர்தல் தொடர்பான தேவைகளுக்கும் பல வகையான செயலிகளை உருவாக்கியுள்ளது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இச்செயலிகள் குறித்தும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் குடிமக்களுக்குத் தெரிவித்து ஊக்கப்படுத்த வேண்டும்.

# தேர்தல்களில் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிக்க திறன்மிகு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தெரிந்து கொள்ள வேண்டியவை இங்கே

### வாக்காளர் உதவி மைய செயலி

- இது வாக்காளர் பெயர் பதிவு, போட்டியிடும் வேட்பாளரின் சுயவிவரங்கள் மற்றும் உடனடியாக தேர்தல் முடிவுகளை தெரிந்து கொள்ள உதவுகிறது.
- வாக்காளர்கள் தங்களின் வாக்காளர் அடையாள அட்டையை வரியோட்டம் (Scan) செய்வதன் மூலம் வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயரையும் வாக்குச் சாவடியையும் கண்டறியலாம்.

### உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ள


- இது வாக்காளர்களுக்கான கைப்பேசிச் செயலி ஆகும். இச்செயலியானது வேட்பாளர்களின் விவரங்கள் மற்றும் குற்றப் பின்னணிகள் அடங்கிய உறுதிமொழிப் பத்திரங்கள் குறித்த விவரங்களை வழங்குகிறது.

### சக்க்ஷம் செயலி

- இது மாற்றுத்திறனாளிகளுக்கானது (PwDs). அவர்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கும், தேடுவதற்கும், வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கும் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலைத் தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

### சி-விஜில் செயலி


- தேர்தல் காலத்தில் தேர்தல் நடத்தை விதிமீறல்களான பணம், மதுபானம் மற்றும் பரிசுப் பொருட்கள் விநியோகம் செய்து வாக்களிக்கத் தூண்டுதல் போன்ற செயல்களை அமலாக்க முகமைகளின் (Enforcement Agencies) மூலம் உடனடி நடவடிக்கைக்காக குடிமக்கள் புகாரளிக்கலாம். எந்தவொரு புகாருக்கும் 100 நிமிடங்களுக்குள் பயன்பாடு மாற்றியமைக்கப்படும்.



# கருடா செயலி

இந்த செயலியானது, வாக்காளர்கள் தொடர்பான விவரங்களில் ஏற்படும் மாற்றங்களை படிவம் 6,7 மற்றும் 8A ஆகியவற்றில் உடனடியாகப் பதிவுசெய்யும் வசதியை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்குகிறது. இல்லந்தோறும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி நடைபெறும் போது இச்செயலி உதவியாக இருக்கும். மேற்கூறிய நடைமுறைக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் எண்மிய வடிவில் (Digital) தடையின்றி இச்செயலியில் பதிவேற்றம் செய்யலாம்.

நாடு முழுவதும் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கருடா செயலியின் பயன்பாட்டு அளவீடை கீழே உள்ள வரைபடம் மூலம் அறியலாம்.




Total App users = 10,43,697

# தேசிய வாக்காளர் தினம் 2023, நாடு முழுவதும் வாக்காளர் தின கொண்டாட்டங்கள்

இந்திய தேர்தல் ஆணையம், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 அன்று, தேசிய வாக்காளர் தினத்தை, தேசிய, மாநில, மாவட்டம் மற்றும் வாக்குச் சாவடி நிலைகளில், வாக்காளர்களின் தேர்தல் பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில் கொண்டாடுகிறது. வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக நடத்தப்பட்ட நாடு தழுவிய கொண்டாட்டங்களைக் கீழே காணலாம்.




இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் சிறந்த தேர்தல் நடைமுறைகளுக்காக தேசிய விருது பெற்றவர்கள் மாண்புமிகு இந்திய ஜனாதிபதியுடன் எடுத்துக் கொண்ட குழு புகைப்படம்.




இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்திற்கான தேசிய பாடலைப் பாடிய பிரபலங்கள் மாண்புமிகு இந்திய ஜனாதிபதியுடன் எடுத்துக் கொண்ட குழு புகைப்படம்.

# சிறந்த வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கான விருதுகள்

## தேசிய வாக்காளர் தினம், 2023

### அசாம்




13வது தேசிய வாக்காளர் தினத்தைக் குறிக்கும் வகையிலும், புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவு செய்த வாக்காளர்களை தேர்தல் நடைமுறையில் பங்கேற்பதற்கு ஊக்கப்படுத்தும் வகையிலும் "வாக்களிப்பதே சிறந்தது, நான் நிச்சயம் வாக்களிப்பேன்" என்ற கருப்பொருளில் தேசிய வாக்காளர் தினம் உதல்குரி மாவட்டத்தில் கொண்டாடப்படுகிறது.

### அந்தமான் நிக்கோபார் தீவு




அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் தலைமை தேர்தல் அதிகாரி, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.

### தமிழ்நாடு




தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு எம். அரவிந்த், ஐஏஎஸ் அவர்கள் சிறந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பரிசளித்து கவுரவித்தார்.

### புட்காம், ஸ்ரீநகர்



ஸ்ரீநகர், ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள புட்காம் மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை மண்டல அலுவலகத்தில் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது.

### ராஜஸ்தான்




ராஜஸ்தானின் ஜலாவர் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் சிறந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகிறது.

### ராஜஸ்தான்




மண்டல்(பில்வாரா, ராஜஸ்தான்)சட்டமன்றத் தொகுதியின் பகுதி எண். 253-ன் வாக்குச்சாவடி நிலை அலுவலரான திரு. ராஜேந்திர பிரசாத் சர்மா, தலைமை ஆசிரியர் கைப்பேசிக் செயலி மூலம் படிவம்-6ஐ அதிகபட்சமாக பதிவேற்றம் செய்ததற்காக விருது வழங்கப்பட்டது.

## டெல்லி




திருமதி. பர்வீன், தென்மேற்கு தில்லியின், சட்டமன்றத் தொகுதி-34 (மத்தியில்) அமைந்துள்ள பாகம் எண். 206-ன் வாக்குச் சாவடி நிலை அலுவலர். 18-19 வயதுடைய இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்ததற்காக விருது வழங்கப்பட்டது.



## எஸ்எஸ்பி ஸ்ரீநகர்



தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீநகரின் (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பகுதியில் பணியில் இருந்த மத்திய காவல் ஆயுதப்படை அதிகாரிகள் உறுதிமொழி எடுத்தனர்.

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை



அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அதிகாரிகள் 13வது தேசிய வாக்காளர் தினத்தைக் கொண்டாடினர். அத்துறையின் அனைத்து பிரிவுகளிலும் வாக்காளர் உறுதிமொழி எடுக்கப்பட்டது.







## சிஐஎஸ்எஃப் (CISF) அதிகாரிகள்

2023-ஆம் ஆண்டு தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நமது நாட்டின் ஜனநாயக மரபுகள் மற்றும் சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தலின் கண்ணியத்தை நிலைநிறுத்துவதற்கு சிஐஎஸ்எஃப் (CISF) அதிகாரிகள் உறுதிமொழி எடுத்தனர்.











# அடிப்படை கதைகள்

திரு. பி. சின்னப்பையன் தர்மபுரி மாவட்டத்தின் நல்லம்பள்ளை தாலுகாவில் வசிக்கிறார். அவர் தர்மபுரி சட்டமன்ற தொகுதியின் பாகம் எண். 262 இல் வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஆக நியமிக்கப்பட்டார். முதலில் அவருக்கு தடையாக இருந்தது அவரது கண் பார்வைக் குறைபாடு மட்டுமே. அவர் ஒரு மாற்றுத்திறனாளி, அவரது ஒரு கண்ணில் 40%பார்வை குறைபாடு உள்ளது. இரண்டாவதாக, இவர் தனது குடியிருப்பிலிருந்து 60கிமீ தொலைவில் உள்ள பென்னாகரம் தாலுக்காவின் ஓதமலையில் (Ootamalai) உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் முதுகலை பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

திரு. சின்னப்பையன் இந்தப் பகுதியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஆகப் பொறுப்பேற்று 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியதால் இப்பகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு அவரைப் பற்றி நன்கு தெரியும். அவருக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை முடிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் தகவல்களை அறிந்து கொள்ளும் விதம் ஆகியவை அவரை ஒரு தொழில்முறை நிபுணராக முத்திரை பதியச் செய்தது. வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண் இணைப்பின் போது விவரங்களைப் பெற ஒவ்வொரு வீட்டின் குடும்ப தலைவரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து வேண்டிய தகவல்களைக் கருடா செயலியில் பதிவேற்றியதுடன், வாக்காளர்கள் தேர்தல் தொடர்பான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் ஊக்கப்படுத்தினார். கூடுதலாக, இவ்வலுவலர் தனது பகுதி சார்ந்த வாக்காளர்களுக்கு ஆதார் இணைப்பு, வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம் போன்ற தேர்தல் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு ஒரு வாட்ஸ்அப் (Whatsapp) குழுவை உருவாக்கினார். இறுதியாக, இவரின் கடின உழைப்பு காலப்போக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உருவாக்கியது. தர்மபுரி மாவட்டத்தில்703 வாக்காளர்களின் (100%) ஆதார் இணைப்பைப் பெற்ற முதல் நபர் திரு. சின்னப்பையன் ஆவார். இவரின் முயற்சியை மாவட்ட நிர்வாகம் பாராட்டி, பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கி கௌரவித்தது.



# வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடனான உரையாடல்

## ஜம்மு காஷ்மீர்
## திருமதி. லீலோ தேவி, சட்டமன்றத் தொகுதி 74ஆர் எஸ் புரா - ஜம்மு தெற்குத் தொகுதி, வாக்குச் சாவடி எண். 52, மாவட்டம் - ஜம்மு (நீல நிறத்தில் எழுதவும்)

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் அங்கன்வாடிப் பணியாளராகப் பணிபுரியும் திருமதி. லீலோ தேவி, கடந்த 6 ஆண்டுகளாக வாக்குச்சாவடி நிலை அலுவலராகப் பணியாற்றி வருகிறார். 2022-ம் ஆண்டு நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தின்போது தனது வாக்குச் சாவடி நிலை அலுவலர் பணியில் சிறப்பாகப் பணியாற்றினார்.


2023 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்திற்கான பணிகளை, முதல் நாளிலேயே துவங்கி அதாவது 15 செப்டம்பர், 2022 முதல் அவரது வாக்குச் சாவடி பகுதியில் அமைந்துள்ள அனைத்து இல்லங்களுக்கும் சென்று ஆதார் இணைப்பிற்கான பணியையும் கூடுதலாக சிறப்பு முகாம்களை அவரது பகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் நடத்தியும் வாக்காளர்களை இத்தேர்தல் நடைமுறையில் முனைப்பாக பங்கேற்க ஊக்கப்படுத்தினார்.



மேலும் இவர், குருத்துவாராக்கள் மற்றும் கோயில்களில் ஒலிபெருக்கி மூலம் வாக்காளர் பட்டியலில் வாக்காளர்கள் தங்களது விவரங்களைப் பதிவு செய்ய முன்வருமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். அவர் அனைத்து படிவங்களையும் எண்மிய முறையில் பதிவேற்றம் செய்து குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே 100% இலக்கை அடைந்துள்ளார். இதற்காக ஜம்முவின் மாவட்ட தேர்தல் அதிகாரியால் அவருக்கு விருது வழங்கப்பட்டது.







Election Commission of India
இந்திய தேர்தல் ஆணையம்

# இந்திய தேர்தல் ஆணையம் பாடல்

நாட்டையும், அதன் பன்முகத் தன்மையையும், இந்தியாவின் ஒவ்வொரு வாக்காளரும், பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்ற தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள "நான் இந்தியா - நாம் அனைவரும் இந்திய வாக்காளர்கள்× என்ற பாடல், இந்தியத் தேர்தல்கள் அனைவரையும் உள்ளடக்கிய வாக்காளர் பங்கேற்பினைக் கொண்டுள்ளது என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

இந்திய தேர்தல் ஆணையம் சுபாஷ் காய் அறக்கட்டளையுடன் இணைந்து தயாரித்த இந்திய தேர்தல் ஆணையத்தின் பாடல், 13வது தேசிய வாக்காளர் தினத்தன்று வெளியிடப்பட்டது.

இந்தப் பாடலை நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பிரபல பாடகர்கள் பாடியுள்ளனர். கிட்டத்தட்ட40 பிரபலங்கள் இந்தப் பாடலில் தோன்றி ஹிந்தி மற்றும் பல மொழிப் பதிப்புகளில் பாடல்கள் பாடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**முழு பாடலை இங்கே கேளுங்கள்:-**

**பன்மொழி பதிப்பு** – https://youtu.be/to324JIljf8

**இந்தி பதிப்பு** www.youtube.com/watch?v=-x6cXNUuEdk

